செ.வெ.எண் : 06/பிப்ரவரி நாள்: 05.02.2019

**இராமநாதபுரம் மாவட்டம்**

**மின்மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரம் பெறுவதற்கு தகுதி வாய்ந்தவர்கள் விண்ணப்பிக்கலாம்**

**மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

மாவட்ட சமூக நலத்துறையின் வாயிலாக விதவை, கணவனால் கைவிடப்பட்டவர், ஆதரவற்றோர் மற்றும் மாற்றுத் திறனாளி ஏழைப் பெண்களுக்கு மின் மோட்டார் பொருத்தப்பட்ட தையல் இயந்திரம் வழங்குவதற்கு தகுதி வாய்ந்த பயனாளிகளிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

விண்ணப்பத்துடன், வருமானச்சான்று ரூ.72,000/-க்குள் (வட்டாட்சியரிடம் பெற வேண்டும்), இருப்பிடச்சான்று (வட்டாட்சியரிடம் பெற வேண்டும் அல்லது ரேசன் கார்டு), தையல் பயிற்சி சான்று (பதிவு செய்யப்பட்ட தையல் நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டது) (6 மாத கால பயிற்சி), வயது சான்று (20 முதல் 40 வயது வரை) அல்லது கல்விச் சான்று அல்லது பிறப்புச் சான்று, சாதிச் சான்று, கடவுச் சீட்டு (Passport Size Photo) அளவு மனுதாரரின் கலர் புகைப்படம்-2, விதவை, கணவனால் கைவிடப்பட்டவர், ஆதவற்றோர், மகளிர் மற்றும் மாற்றுத் திறனாளி பெண் சான்று நகல், ஆதார் அடையாள அட்டை ஆகிய சான்றுகள் இணைக்கப்பட வேண்டும்.

மேற்கண்ட ஆவணங்களுடன் விண்ணப்பங்களை மாவட்ட சமூகநல அலுவலர், மாவட்ட சமூகநல அலுவலகம், இராமநாதபுரம் என்ற முகவரியில் 15.02.2019-க்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**